| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 26.11.2021 |
| தகப்பனார் பெயர் | மாரியப்பன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள 02.07.1941ல் ஏற்பட்டதாக கூறும் பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார்களா என்று தெரியாது. அதுபோல் ஒரு பத்திரம் இல்லை எனவும், அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யார் யாருக்கு இடையே பாகம் பிரிக்கப்பட்டது என்றால் என்னுடைய தந்தைக்கு தான் தெரியும். பாகபிரிவினை பத்திரத்தில் என்னென்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய தந்தையிடம் கேட்டு தெரிவிக்கிறேன். என்னுடைய தகப்பனாருக்கு ஞாபகமறதி எனவும், என்னுடைய தகப்பனாரின் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிப்பதாக சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனக்கு அனைத்தும் தெரியும் எனவும், தற்போது என்னுடைய தகப்பனாருக்கு தான் தெரியும் என உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.252/8, 9ல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் இரண்டும் சேர்த்து 15 சென்ட் உள்ளது. தனிதனியாக தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.252/8ன் நான்கெல்லை என்னவென்றால் முனியகவுண்டர் நிலத்திற்கும் கிழக்கு, பழனிவேல் வகையறாவிற்கும் தெற்கு, பூசாரி கோவிந்தன் நிலத்திற்கும் வடக்கு, பொது தடத்திற்கும் மேற்கு மற்றும் சர்வே எண்.252/9 சொத்தானது 252/8க்கு அடுத்து உள்ளது. மேற்கே உள்ளது. சர்வே எண்.252/5ன் நான்கெல்லை என்னவென்றால் 252/8க்கு கிழக்கே உள்ளது, கிழக்கு மற்றும் தெற்கில் எங்களுடைய வீடு உள்ளது, வடக்கே கோவிந்தன் நிலம் உள்ளது, மேற்கே முனியகவுண்டர் நிலம் உள்ளது. சர்வே எண்.252/10–ன் நான்கெல்லை என்னவென்றால் கோவிந்தன் நிலத்திற்கும் வடக்கு, முனிய கவுண்டர் நிலத்திற்கும் கிழக்கு, பழனிவேல் வகையறாவிற்கும் தெற்கு, மேற்கே எங்களுடைய இடம் உள்ளது. சர்வே எண்.252/11 என்பது 252/10– யை ஒட்டி மேற்கு பக்கம் உள்ளது. அதே நான்கெல்லை தான். 1ம் பிரதிவாதி பெயரில் வழக்கு உள்ளது என்பதற்கு ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைக்கிறேன். வழக்கு

எண் தெரியுமா என்றால் எழுதி வைத்துள்ளேன். நங்கவள்ளியில் 2 வழக்குகளும், ஜலகண்டாபுரத்தில் 5 வழக்குகளும் உள்ளது. நான் ஆடிட்டராக உள்ளதால் அவ்வாறு வழக்கு இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் எனவும், வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. மாரியப்பன் வாரிசே இல்லை என குறிப்பிட்டு வாரிசு சான்றிதழை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். அது போல் ஆவணத்தை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. சலான் நான் ஒப்படைக்கவில்லை எனவும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் ஆட்சேபணை செய்ததால் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்றால் வாரிசுகளை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதால் வழங்கவில்லை. ஆட்சேபணை கொடுத்ததால் தான் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை எனவும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சகோதரர் மாரியப்பன் என ஒருவர் இருந்தார் எனவும், அவர் 25.09.1984ல் இறந்துவிட்டார் என்றால் அவ்வாறு ஒரு நபரே கிடையாது. வா.சா.ஆ.13 கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் ஆமாம். பூசாரிதாசன் வளவில் அவர் விசாரிக்கவில்லை. ஆனால் அவர்கள் சஞ்சீவியூரில் தான் சாட்சிகளை விசாரித்தார்கள். முறையாக விசாரணை செய்யப்பட்டு வழங்கிய ஆவணம் எனவும், அதனடிப்படையில் தான் நீதிமன்றமும் இறப்புச் சான்றிதழும் வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வம்சாவழியில் மாரிமுத்து மகன் மாரியப்பன் என்பவர் இல்லை எனவும், நான் பொய்யாக கூறுகிறேன் என்னால் மாரிமுத்து மகன் மாரியப்பன் தன்னுடைய வைப்பு மனைவிக்கு 1965லேயே தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார். மாரிமுத்து மகன் மாரியப்பன் என்னுடைய தகப்பனாரின் தாத்தா என நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் வா.சா.ஆ.1 வம்சாவழிபட்டியலில் குறிப்பிட்டிருப்பேன் எனவும், இல்லாததால் தான் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் வா.சா.ஆ.1 வம்சாவழிப்பட்டியலுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 1ம் பிரதிவாதி சலான் கட்டியதாக கூறுவது தவறு என்றால் அதனை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளதாக கூறுவது பொய் எனவும், வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா

வேறு ஒரு நபர் பெயரில் உள்ளநிலையில் விளம்புகை பரிகாரம் கோராததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் என்னுடைய தகப்பனாருக்கு தெரியாததால் பட்டா அவர் வாங்கவில்லை. 2007 ல் தான் நான் பட்டா ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளநிலையில் 1984 ல் மாரியப்பன் பெயரிலேயே 252/5, 10, 11 ஆகியவை ஏற்பட்டுள்ளது என்றால் அதற்கு வாய்ப்பே இல்லை. அ பதிவேடு 1984 ல் ஏற்பட்டுள்ளது எனவும், மேலொப்பம் தான் 2015 ல் போடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு ஒரு நபரே இல்லை. வழங்கவும் வாய்ப்பு இல்லை. 2017 ல் வாரிசு சான்றிதழ் கோரியுள்ள நிலையில் 1989 ல் மாரியப்பன் இறந்துள்ளதால் வாரிசு சான்றிதழில் பெயர் இடம் பெறவில்லை என்றால் அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்றத்திலேயே கொடுத்திருப்பார்கள். முறையான விசாரணை செய்து மாரிமுத்து மகன் மாரியப்பனுக்கு பட்டா வழங்கியுள்ளனர் எனவும், அவர் 1ம் பிரதிவாதியின் சகோதரர் எனவும், 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் வழக்கு சொத்தில் குடியில்லை என்றால் அவர் தான் குடியிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சம்மந்தப்பட்டது தான். சர்வே எண்.249/7 ஏ–வில் நாங்கள் வசித்து வருகிறோம் என்றால் என்னுடைய தம்பி தான் அங்கிருக்கிறார். என்னுடைய தகப்பனார் சர்வே எண்.252/5 ல் உள்ளார். சர்வே எண்.252/5 ல் வீடே இல்லை என்றால் என்னுடைய சின்ன அக்கா திருமணத்திற்கு முன்பே வீடு வாங்கியுள்ளோம். என்னுடைய தகப்பனார் சுவாதீனத்தில் இல்லை எனவும், என்னுடைய தகப்பனாருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து மகன் மாரியப்பன் என்பவர் 1ம் பிரதிவாதியின் சகோதரர் என்பதால் தான் பட்டா தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது தவறு. அதனால் தான் எங்களுடைய தரப்பில் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றாலும் அது தவறு.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.